
## முத்தமிழறிஞர் கலைஞர் என்றும் முத்தமிழாய் வாழ்வார்!



1. ஐந்துமுறை தமிழகத்தை ஆண்ட நல்லோர் /
ஆற்றலுறு தளபதியை ஈன்ற வல்லோர் //
செந்தமிழ இனத்தையுமே நெஞ்சந் தாங்கிச் /
சிறப்பார்க்கும் பெரியாரின் வழியிற் சென்று //
சிந்தனையின் ஊற்றாகும் அண்ணா கொள்கை /
சிறிதளவும் மாற்றமின்றி நிலைக்க வைத்த //
முந்துதமிழ்ப் பற்றுடைய கலைஞர் என்றும் /
முகில்தமிழ நிலத்தினிலே வாழ்வார் என்றும் ! //

2. திருக்குறளிற் பற்றோடு நெஞ்சம் வைத்துத் /
தென்குமரி சிலைவைத்து நிலைக்கச் செய்து //
அரும்புலவர் வள்ளுவர்க்கே கோட்டம் கண்டார் /
ஆற்றலதன் உருமெனத் தோற்றம் கொண்டார் //
வருதமிழ இனப்பகையை வெற்றி கண்டு /
வளத்தோடு தமிழினத்தை வாழ வைக்கும் //
கருமுதலே தமிழூற்றம் கொண்ட சீரார் /
கலைஞருமே முத்தமிழ்போல் இசை யால் வாழ்வார் ! //

**புலவர் பழ.தமிழாளன்.**
இயக்குநர் பைந்தமிழியக்கம்.
திருச்சிராப்பள்ளி.

---

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் - கலாநிதி வீராசாமி பங்கேற்பு! தி.மு.தனியரசு ஏற்பாடு!

சென்னை, ஆக. 7 -

இன்று (ஆகஸ்ட் 7) ஆம் நாள் காலை 6.00 மணிக்கு திருவொற்றியூர் கிழக்கு பகுதி அலுவலகத்தில் பகுதி கழக அவைத் தலைவர் ஆர். சி.ஆசை தம்பி தலைமையில் பகுதி கழக நிர்வாகிகள் எம்.வீ.குமார், ஆர்.எஸ்.சம்பத், இரா.குமரேசன், கே. பிரபாவதி ஆகியோரின் முன்னிலையில் முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பிறகு மதியம் 12.00 மணியளவில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி கழக பணிமனையில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளரும் 1 - வது மண்டல குழுத் தலைவருமான தி.மு.தனியரசு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

இதில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., மாநில மீனவர்அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., தலைமை கழக வழக்கறிஞர், வீ.கவி. கணேசன், திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர், வை.மா.அருள்தாசன், சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத் தலைவர், குறிஞ்சி .எஸ். கணேசன், வடகிழக்கு மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன் தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.இராமநாதன்

பொதுக்குழு உறுப்பினர்கள்: டி.ஏ.ராஜ், ஆர்.முருகேசன், வி.சாந்திபக்தன், வட்ட கழக செயலாளர்கள் தா. கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல். சரவணன், குருத்து சி.முனுசாமி, கவி.சதிஸ் குமார், கேபில்டிவி.எம். ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாமன்ற உறுப்பினர்கள் வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர். மாவட்ட பிரதிநிதிகள் : எஸ்.பாஸ்கர், நந்திவர்மன், ஆர்.ரஜினி பாபு, டி.டி.எம்.பாபு, ஆர். டில்லி, அ.அப்துல் சலீம், ம.ஜெயராமன், வி.பழனி வேல், ம.எத்திராஜ், கே. கார்த்திகேயன், பி.எஸ். சைலஸ், ப.சந்தான கிருஷ்ணன் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆகவே இன்னாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில அளவிலான நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின், மாவட்ட பகுதி வட்ட அளவிலான நிர்வாகிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவரணி ஆதி திராவிட அணி, வர்த்தக அணி, தொழிலாளர் அணி, மீனவர் அணி தொண்டர் அணி, இலக்கிய அணி, சிறுபான்மையினர் அணி, வழக்கறிஞர் அணி, மருத்துவர் அணி, விவசாய தொழிலாளர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி மகளிர் தொண்டர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, இலக்கிய பகுத்தறிவு பேரவை பொறியாளர் அணி போன்ற அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

எஸ்.தமிழ் செல்வன் நன்றி கூறுகிறார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எலமந்தா
### ஆகஸ்ட் 7 (1995)



**தி.மு.கழக ஆதிதிராவிட நலப் பிரிவு மாநில செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**எப்பொழுதும் ஓடியாடி ஏதாவது கழகப் பணி, பொதுப்பணி மற்றும் ஆதிஆந்திர மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நிகரற்று விளங்கியவர்.**

**“தொண்டனாக அலைந்தவர். தொழில் மேற்கொண்டு சிறந்தவர். என் விருப்பம் நிறைவேற்றிட எம்.எல்.சியாகப் பொறுப்பேற்று மேலவையில் கருத்து முழக்கம் செய்தவர். கழகத்தை உயிராக எண்ணியவர்!” என தலைவர் கலைஞர் அவர்களால் ‘வீரவேங்கையொன்று வீழ்ந்ததே!’ என இரங்கல் கடிதத்தில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# அண்ணா - கலைஞர் - தளபதி!

### பழுத்த காந்தியவாதி கிருஷ்ணம்மாள் உருக்கமிகு பேட்டி!

**காந்தியத் தம்பதியான கிருஷ்ணம்மாள் - ஜெகந்நாதன். தென் மாவட்ட குக்கிராமம் ஒன்றில் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவரான கிருஷ்ணம்மாள் காந்திய இயக்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அதே தென் மாவட்டத்தின் ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த ஜெகந்நாதனை காந்திய இயக்கத்தில் சந்தித்த கிருஷ்ணம்மாள், அவரைத் தன் வாழ்க்கைத் துணையாக அடையாளம் கண்டார். “இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகுதான் திருமணம்; ஒரு தலித் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வேன்; வாழ்க்கையைச் சமூக சேவைக்குத்தான் அர்ப்பணித்துக் கொள்வேன்” என்பன உள்ளிட்ட பல வைராக்கியங்களைக் கொண்டிருந்த ஜெகந்நாதன். ஒரு லட்சியத் திருவுருவாகவே கிருஷ்ணம்மாளைப் பார்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**

‘இந்து தமிழ்திசை’ நாளேடு - ‘மாபெரும் தமிழ் கனவு’ பகுதிக்காக - பழுத்த காந்தியவாதி கிருஷ்ணம்மாளிடம் சமஸ் பேட்டி கண்டிருந்தார். அதில் சில பகுதிகள்...

**செய்தியாளர்** : *அண்ணாவைச் சந்தித்த தருணத்தை நினைவுகூர முடியுமா? அண்ணா எப்படியான மனிதராக உங்களுக்குத் தோன்றினார்?*

**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்** : அண்ணா பற்றி ஞாபகப்படுத்தும் போது, அவர் பாபா முன் மரத்தடியில், மண் தரையில் உட்கார்ந்து எளிமையாகப் பேசிக் கொண்டிருந்ததுதான் முதலில் ஞாபகத்துக்கு வருகிறது. ஐயா தான் (ஜெகந்நாதன்) பாபாவிடம் அண்ணாவை கூட்டிக்கொண்டு வந்தார். பூமி தான இயக்கத்தில் இணைந்து கொள்ளும்படி அண்ணாவை பாபா கேட்டார். பாபாவின் நல்லெண்ணத்திலும் முயற்சியிலும் தனக்குப் பெரும் மதிப்பிருப்பதாகவும், ஆனால் தங்களால் இதில் பங்கெடுத்துக்கொள்ள முடியாது என்றும் அண்ணா கூறினார். போராட்டத்தில் அவர் பங்கெடுத்துக் கொள்ள வில்லை. அன்றைக்குப் பெரு நிலவுடைமையாளர்கள், மிராசுதாரர்கள் பலரும் காங்கிரஸைச் சார்ந்தவர்களாக இருந்தபடியாலும் அவர்களால் நிலம் கோரும் இடத்தில் தி.மு.க.வினர் இணைந்து நின்றால், அவர்கள் இதன் பொருட்டே கொடுக்க மறுக்கக்கூடும் என்றும் அண்ணா நினைத்தார். மேலும், நிலச் சீர்திருத்தம் நடப்பதே தீர்வு என்றும் அவர் எண்ணினார். அதேசமயம், எங்களுக்கு எங்கேனும் பிரச்சினை ஏற்படுமாயின் தன்னுடைய இயக்கத்தினர் துணை நின்று உதவுவார்கள் என்றும் உறுதியளித்தார்.



**செய்தியாளர்**: *பிற்காலத்தில் தி.மு.க.வினர் அப்படி உங்களுக்கு உதவுபவர்களாக இருந்தார்களா?*

**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்** : அண்ணாவுக்குப் பின் கலைஞர். அவர் மன்னை நாராயணசாமியை எங்களுக்குக் காட்டிவிட்டார். அப்போது மன்னை நாராயணசாமிதான் தஞ்சைப் பிராந்தியத்தின் தி.மு.க. தலைவராக இருந்தார். பல சமயங்களில் எங்களுக்கு அவர் உதவியிருக்கிறார். ஒரு போராட்டத்தின்போது இரவில் எங்களுக்கு உதவி தேவைப்பட்டது. அப்போது மன்னை நாராயணசாமி அமைச்சராக இருந்தார். நாங்கள் மன்னார்குடிக்குப் போனோம். அமைச்சர் தரங்கம்பாடியில் இருப்பதாக எங்களுக்குச் சொன்னார்கள். நாங்கள் நள்ளிரவில் தரங்கம்பாடியை அடைந்தோம். அந்த நேரத்திலும் எங்களுக்கு உதவக் கிளம்பி ஓடிவந்தார். பிற்பாடும் இந்தப் பகுதி தி.மு.க. மாவட்டச் செயலாளராக யார் இருக்கிறார்களோ அவர்கள் எங்களுக்கு உதவும்படி கலைஞர் சொல்லி வைத்திருந்தார்.

தவிர, எந்தச் சமயத்தில் நான் சென்றாலும், உடனே சந்திக்க அனுமதிக்கும்படி கலைஞர் அவருடைய உதவியாளர்களுக்குச் சொல்லியிருந்தார். முதல்வராக இருக்கும்போது எத்தனையோ சமயங்களில் நான் கலைஞரைச் சந்திக்கச் சென்றிருக்கிறேன். அவரே எழுந்து வந்து வரவேற்பார். **“தயாளு இங்கே வா, அம்மாவுக்கு காபி கொண்டுவா”** என்று தன் மனைவியை அழைத்து எனக்கு அவர் கையால் காபி போட்டுத் தரச் சொல்வார்.

எங்கள் இயக்கம் மூலம் நிலங்களைப் பத்திரப் பதிவு செய்யும் போது அதற்குக் கட்டணம் செலுத்துவதற்குப் பணம் புரட்டுவதென்பது எங்களுக்குப் பெரிய சாவல். கலைஞரிடம் இதைச் சொன்னபோது, எங்கள் இயக்கத்தின் சார்பில் பத்திரப் பதிவு செய்யும் போது அதற்குக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்று ஒரு அரசாணை பிறப்பித்தார். அது எங்களுக்கு அவர் செய்த வாழ்நாள் உதவி.

தன் மகன் ஸ்டாலினிடமும் எனக்கு எக்காலத்திலும் உதவ வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் கலைஞர். ஒருசமயம், வீடற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து எங்களுக்கு உதவினார்கள். அதாவது, கற்கள் செய்து கொள்வதற்கான ‘ஃபிளையாஷ்’ பொருளை எங்களுக்கு அவர்கள் தந்தார்கள். அங்கிருந்து அதை எடுத்துச் செல்ல வேண்டியது எங்கள் பொறுப்பாக இருந்தது. லாரி ஓட்டுநர்கள் நிறையப் பணம் கேட்டார்கள். கொஞ்சம் குறைந்த கட்டணத்தில் லாரிக்குச் சொல்லிவிட யாரையாவது அணுக வேண்டும் என்றிருந்தபோது சம்பந்தமே இல்லாமல் ஸ்டாலின் நினைவுக்கு வந்தார்.

அவரிடம் பேசினேன். **“கவலையை விடுங்கள். நீங்கள் பணமே கொடுக்க வேண்டாம். அது உங்களை வந்துசேர வேண்டியது என் பொறுப்பு” என்று சொல்லி ஏற்பாடு செய்தார்.**

நாங்கள் அறவழி இயக்கத்தினர் என்றாலும் நாங்கள் எதிர்த்து நின்ற பண்ணையாளர்களும் பெரு முதலாளிகளும் எந்த வழிக்கும் செல்லக் கூடியவர்கள்தான் என்பதால், என் வாழ்க்கை நெடுக வன்முறையை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலேயே நான் இருந்திருக்கிறேன். அப்படியான சூழல்களில் தி.மு.க.வினரின் ஆதரவு எனக்கு இருந்திருக்கிறது.

**நன்றி:**
**இந்து தமிழ் திசை**
**மாபெரும் தமிழ் கனவு**

---

அன்னை மொழி காக்க தமிழ்நாட்டில் நடைபெற்ற போராட்டம்

## இன்றைய தலைமுறையினர் அறிய வேண்டியது காலத்தின் அவசியம்!

### ‘தினகரன்’ ஏடு தலையங்கம்

சென்னை, ஆக.7-

வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒப்பற்ற நாடு இந்தியா. இப்படி தனிச்சிறப்பு கொண்ட இந்திய நாட்டிற்கு தேசிய மொழி என்று தனியாக எதுவுமில்லை. அதேநேரத்தில் அலுவல் மொழிகளாக 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பாஜ தலைமையிலான ஒன்றிய அரசானது சமஸ்கிருதத்திற்கும், இந்திக்கும் மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதை அவ்வப்போது ஆதாரங்களுடன் எதிர்க்கட்சிகள் அம்பலப்படுத்தி வருகின்றன. இது ஒருபுறமிருக்க, பிரதமர் மோடி உள்ளிட்ட பாஜவின் முக்கியத்தலைவர்களும், ஒன்றிய அமைச்சர்களும் ஒவ்வொரு மாநிலத்திற்கு செல்லும் போதும், அங்குள்ள மக்களின் தாய் மொழியை வானளாவ புகழ்வதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். நாடாளுமன்றம் தொடங்கி பல்வேறு நிகழ்வுகளில் பிரதமர் மோடியின் தமிழ்பேச்சுகள் பேசு பொருளாகவும் மாறியது.

இந்த நிலையில் அலுவல் மொழிக்கான நாடாளுமன்றக்குழுவின் 38-வது கூட்டம் சமீபத்தில் நடந்தது.



தினகரன்
ஆகஸ்ட் 6, 2023 ஞாயிற்றுக்கிழமை
காலத்தின் அவசியம்
வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒப்பற்ற நாடு இந்தியா. இப்படி தனிச்சிறப்பு கொண்ட இந்திய நாட்டிற்கு தேசிய மொழி என்று தனியாக எதுவுமில்லை. அதேநேரத்தில் அலுவல் மொழிகளாக 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பாஜ தலைமையிலான ஒன்றிய அரசானது சமஸ்கிருதத்திற்கும், இந்திக்கும் மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதை அவ்வப்போது ஆதாரங்களுடன் எதிர்க்கட்சிகள் அம்பலப்படுத்தி வருகின்றன.
இது ஒருபுறமிருக்க, பிரதமர் மோடி உள்ளிட்ட பாஜவின் முக்கியத்தலைவர்களும், ஒன்றிய அமைச்சர்களும் ஒவ்வொரு மாநிலத்திற்கு செல்லும் போதும், அங்குள்ள மக்களின் தாய் [illegible]

இதில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமை வகித்து பேசினார். அவரது பேச்சு, இந்தியை மட்டுமே ஒன்றிய அரசு தூக்கிப் பிடிக்கிறது என்பதை மீண்டும் அம்பலமாக்கியுள்ளது. “பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் ஒருநாளும் ஆங்கிலத்தில் உரையாற்றியதில்லை. இந்தியில்தான் பேசியுள்ளார். நமது நாட்டைப் பொறுத்தவரை இந்தியை ஏற்றுக்கொள்ளும் வேகம் மெதுவாக இருந்தாலும், எதிர்ப்பின்றி இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்,” என்று பேசியிருப்பதே இதற்கான சாட்சியம்.

இந்திய மொழிகள் அனைத்தும் இந்தியிடம் மண்டியிட்டே ஆகவேண்டும் என்பதையே அமித்ஷாவின் பேச்சு உணர்த்துகிறது. இது பல்வேறு மொழி பேசும் மாநில மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரத்தில் எப்போதும் போல் தமிழ்நாடுதான், அமித்ஷாவின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து கம்பீரமாக முதல் சாட்டையை வீசியுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாட்டின் முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள டிவிட்டர் பதிவில், “எதிர்ப்பின்றி அனைவரும் இந்தி மொழியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சு, மற்றமொழி பேசும் மக்களை இந்திக்கு கொத்தடிமை ஆக்கும் எதேச்சதிகார முயற்சியாகும்.

இதைக்கேட்டு நடக்க தமிழ்நாடு, தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல. தமிழ்நாட்டுக்கு வந்தால் தொன்மையான மொழி என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்கு சென்றால் நஞ்சை பரப்புவதும் பாஜவின் பசப்பு அரசியல் என்பதை அனைவரும் அறிவோம். இந்தி திணிப்பை இப்போது மேற்கு வங்கமும், கர்நாடகமும் எதிர்க்கத் தொடங்கி இருப்பதை அமித்ஷா உணரவேண்டும். 1965 மொழிப்புரட்சி காலத்தை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள்,” என்று அவர் எச்சரித்திருப்பது பல மாநிலங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதே நேரத்தில் பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கியது இந்திய துணைக்கண்டம். இங்கு ஒரு சிறுபகுதி மக்களின் மொழியான இந்தியை, பிற தேசிய இனங்கள் மீது வலுக்கட்டாயமாக திணிக்கும் முயற்சிகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்பதையும் முதல்வரின் பதிவு முத்தாய்ப்பாக முன்வைத்துள்ளது. இங்கே முதல்வர் குறிப்பிட்டுள்ள 1965 மொழிப்புரட்சி என்பது அன்றைய காலகட்டத்தில் இந்திய அரசியலில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய எழுச்சியின் உச்சபோராட்டம். நூற்றுக்கணக்கான கட்டிளம் காளைகள், அன்னை மொழி காக்க தங்களை தீக்கிரையாக்கி மாண்டனர். அந்த உயிரோட்டமான போராட்டமும், அதன் பிறகு தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும்தான், இன்றைய முன்னேற்றத்திற்கான நீரோட்டம். இதை நமது தலைமுறைகள் அறிய வேண்டியதும் இங்கே காலத்தின் அவசியம்.

---

## மொராக்கோவில் மினி பஸ் கவிழ்ந்து விபத்து

மொராக்கோ. ஆக.7-

வட ஆப்பிரிக்காவில் உள்ள மொரொக்கோ நாட்டில் உள்ள மத்திய மாகாணமான அஜிலாலில் மிக மோசமான சாலை விபத்து நடந்துள்ளது. இந்த விபத்தில், 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

அஜிலாலில் உள்ள டெம்னேட் நகரில் நடைபெற்ற வாராந்திர சந்தைக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற மினி பஸ் வளைவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை தொடங்கியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொராக்கோ உள்பட பிற வட ஆப்பிரிக்க நாடுகளின் சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்நாட்டில் உள்ள பல ஏழை குடிமக்கள் கிராமப்புறங்களில் பயணம் செய்ய மினி பஸ்களைப் பயன்படுத்துகின்றனர்.

மொராக்கோவில் ஆண்டுதோறும் சராசரியாக 3,500 சாலை இறப்புகள் மற்றும் 12,000 காயங்கள் பதிவு செய்யப்படுகின்றன. தேசிய சாலை பாதுகாப்பு அமைப்பின்படி, சராசரியாக ஒரு நாளைக்கு 10 இறப்புகள் பதிவாகின்றன.